**தலைப்பு 126 - கல்வி அமைச்சு**

**....................................................**

## 1. நிதிக்கூற்றுக்கள்

**............................**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**......................................................**

கல்வி அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்வி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் கல்வி அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 08 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்வி அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**.......................................................................**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

**.............................................................................................................**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்வி அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் அமைச்சினால் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

…………………………………………………………...........................…………….

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

……………………………………………………..……

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந்நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1(அ) பந்தியின் அவதானிப்பு தொடர்பாக முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

.......................................................................

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

.............................................

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான நிதியற்ற சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ............................................... | .............................. | ...................... |
| (அ) 2021 ஆம் ஆண்டின் போது நிதியற்ற சொத்துக்களை கொள்வனவு செய்தலின் பெறுமதிக்கும் நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றுக்குமிடையே ரூபா 8,047,201,388 தொகையான வித்தியாசம் காணப்பட்டது. | சொத்துக்களின் மீதிகளுக்கிடையேயான வித்தியாசத்திற்கான காரணமாக இருந்தது திறைசேரி கணக்குகளை சமப்படுத்துவதற்காக திறைசேரியினால் மேற்கொள்ளப்பட்ட செம்மையாக்கல்களாகும். | கொள்வனவு செய்தலின் பெறுமதிகளும் ACA (2) (i) இன் படியான பெறுமதிகளும் சமமாக இருத்தல் வேண்டும். |
| (ஆ) நிதியற்ற சொத்துக்களின் முன்னைய ஆண்டிற்கான இறுதி மீதியை மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதியாக கணக்கீடு செய்யும் போது ரூபா 5,115,162,713 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | மாதாந்த கணக்கீடுகளின் பொழிப்பிற்கும் நிலையான சொத்துக்கள் System ஒன்றிற்கும் உள்ளடக்கப்படுகின்ற நிலையான சொத்துக்களின் பெறுமதியை சமப்படுத்தி மாதாந்தம் அமைச்சிற்கு | நிதியற்ற சொத்துக்களின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளை ஒப்பீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அறிக்கையிடுமாறு அனைத்து அலுவலகங்களுக்கும் தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவு முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளுக்காக கிடைத்துள்ள மொத்த தேறிய நிதி ஏற்பாடு முறையே ரூபா 43,274,600,000 மற்றும் ரூபா 23,951,948,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் மீண்டுவரும் மற்றும் மூலதன நிதி ஏற்பாடுகள் முறையே ரூபா 1,265,682,252 மற்றும் ரூபா 4,297,834,845 தொகைகள் சேமிக்கப்பட்டிருந்தன. | 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக இருந்தது. | குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக திட்டமிட்டவாறு நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| (அ) 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 2 (ஈ) ஒழுங்குவிதிகளுக்கு முரணாக மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 9,910,403,566 தொகையான பொறுப்புக்களும் ரூபா 2,244,165 தொகையான கடப்பாடுகளும் உருவாக்கிக் கொள்ளப்பட்டிருந்தன. | தீர்த்துவைக்கப்பட்ட எனினும் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்திற்குள் நாளது வரையாக்கப்படாத பொறுப்புக்கள் மற்றும் தொழில்நுட்ப சிக்கல்களின் அடிப்படையில் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தினை நாளது வரையாகடயாக்காமையால் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 18 செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 1,925,895,033 தொகையான சேமிப்பினை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. | சில கடப்பாடுகளும் பொறுப்புக்களும் தற்பொழுது செலுத்தப்பட்டுள்ளதுடன் தொழில்நுட்ப சிக்கல்களின் அடிப்படையில் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தினை நாளது | சேமிப்பினை மிகைத்து பொறுப்புக்களை மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வரையாக்காமையால் நிதிக்கூற்றுக்களில் உள்ள பொறுப்புக்களையும் கடப்பாடுகளையும் ஏடுகளிலிருந்து நீக்குவதற்கு உரிய பிரிவுகளிடம் விசாரிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | உயர்கல்விப் பிரிவிற்குரிய ரூபா 1,059,850 கடப்பாடுகள், ரூபா 3,691,502 பொறுப்புக்கள், நி.பி 94(2)(3) இன் பிரகாரம் உருவாகிய ரூபா 76,318,524 தொகையான கடப்பாடுகள் அமைச்சின் கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை. | உயர்கல்விப் பிரிவு வழங்கியுள்ள வரைபு அறிக்கையில் அனைத்து பொறுப்புக்களும் உள்ளடக்கப்படாமையின் மூலம் காட்டப்பட்டுள்ள பொறுப்புக்கள் கல்வி அமைச்சின் ஒன்றித்த ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடக்கியிருக்கவில்லை. | தலைப்புக்குரிய அனைத்து பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கணக்கிற்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பொறுப்புக்கள் பட்டோலைகளின் பிரகாரம் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகள் தொடர்பாக ரூபா 2,026,521,143 தொகையான பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது மீளாய்வாண்டில் பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் குறிப்பு (iii) இன் கீழ் காட்டப்பட்டுள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேடானது சிகாஸ் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள தகவல்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் போது சில பொறுப்புக்கள் தீர்த்துவைக்கப்பட்டிருந்தும் அத்தகவல் தொழில்நுட்ப தவறின் அடிப்படையில் சிகாஸ் இணைய தளத்தில் நாளதுவரையாக்கியிருக்கவில்லை. | பொறுப்புக்களை தீர்த்து வைப்பதற்கும் சரியாக கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 வைப்புக் கணக்கு

..................................

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | .................................................. | ............................... | ........................ |
| (அ) | நிதிப்பிரமாணம் 571 இற்கு முரணாக 02 ஆண்டுகளை மிகைத்த அரசாங்க வருமானத்திற்கு செலவுவைக்கப்படாத 06 வைப்புக் கணக்குகளின் பெறுமதி ரூபா 344,140,699 ஆக இருந்ததுடன் 05 ஆண்டுகளை மிகைத்த ரூபா 38,366,397 தொகையும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | இம்மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு மாகாண திணைக்களத்திற்கும் கல்விக் கல்லூர்ரிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் தற்பொழுது தீர்த்துவைக்கப்பட்ட தொகையினை ஒரு மாதத்திற்குள் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உள்நாட்டு பட்டப்படிப்பிற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு வெளிநாட்டு புலமைப் பரிட்சில்களை வழங்குவதற்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது சீன தூதுவராலயத்தினால் வழங்கப்பட்ட ரூபா 8,860,000 தொகை நலன்பெறுனர்களுக்கு வழங்கப்படாது அறிக்கைத் திகதி வரை உயர் கல்விப் பிரிவின் பொதுவைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் அடிப்படையில் சேமிக்கப்பட்டிருந்தது. | புலமைப்பரிசில்களை வழங்குவதற்காக வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் மானியங்கள் தாமதமின்றி உரிய நலன்பெறுனர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்றுக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| இணக்க கூற்றுக்களின் பிரகாரம் இடமாற்றம் பெற்று வந்துள்ள, இடமாற்றம் பெற்று சென்றுள்ள, மரணமடைந்த, ஓய்வு பெற்ற, வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட, சேவையைக் கைவிட்டுச் சென்ற மற்றும் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய மீதி ரூபா 198,883,895 ஆகும். இதில் 05 ஆண்டுகளை மிகைத்த மீதி ரூபா 75,155,836 ஆக இருந்ததுடன் அம்மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தகவல்களை தேடிக்கண்டுபிடிக்க முடியாமை, நிதி ஏற்பாடு போதியதாக இல்லாமை, விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவைக்கு வருகை தராமை போன்ற காரணங்களால் மீதியை தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையாக உள்ள மீதிகளை அறவீடு செய்வதற்கும் கடன் மீதியை அறவிட்டு உத்தியோகத்தர்களை விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்**

**..........................................................................................................................**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ................................. | ...................................... | ................................ |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகதரால் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும், கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுபடுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் விளைதிறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையினை விளைதிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் மீளாய்வினை எழுத்துமூலம் செய்து அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கவேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான கூற்று கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | 2018 இன் 19 ஆம் தேசிய கணக்காய்வு அ சட்டத்திள் 38 ஆம் பிரி ஒழுங்குவிதிகளின் ப நடவடிக்கை எ வேண்டும். |

**2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

**..........................................................................................................................................**

தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஒழுங்குவிதிகளுடனான இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| | ................. | ................ | .................. | ............ |
| (அ) | 1961 இன் 8 ஆம் இலக்க மூன்றாம் நிலை பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (மேலதிக ஒழுங்குவிதிகள்) அதிகாரச் | 5 வயதிலிருந்து 14 வயது வரையான வயதெல்லையை கடந்த பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குவதற்காக தனியார் துறைக்கு பாடசாலையை ஆரம்பிக்க முடியாதிருந்த | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டம் மற்றும் 1978 இன் 4 ஆம் இலக்க கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் (BOI) கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் | 1961 இன் 8 ஆம் இலக்க மூன்றாம் நிலை பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (மேலதிக ஒழுங்கு விதிகள்) அதிகாரச் சட்டத்தினை |

| | | | | |
|---|---|---|---|---|
| | சட்டத்தின் 25 ஆம் பிரிவு | போதிலும் கல்வி அமைச்சின் தலையீடின்றி வியாபார நிறுவனமாக சர்வதேச பாடசாலைகளும் மதப்பாடசாலைகளாக மத்ரஸாபாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | மத்ரஸா பாடசாலைகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் மீளாய்வு நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. 1961 இன் 8 ஆம் இலக்க மூன்றாம் நிலை பாடசாலைகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் இப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட வில்லை. | செயற்திறனாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1986 இன் 30 ஆம் இலக்க கல்வியில் கல்லூரிகள் அதிகாரச் சட்டத்தின் 3,4 மற்றும் 5 ஆம் பிரிவுகள் | கல்விக் கல்லூரிகளை முகாமைத்துவம் செய்வதற்காக "சபை" எனக் குறிப்பிடுகின்ற கல்வியல் கல்லூரிக்காக 18 அதிகாரங்கள் கடமைகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. அவ்வாறான ஒரு சபை 2008 ஆம் ஆண்டிலிருந்து அறிக்கைத் திகதி வரை அமுல்ப்படுத்தப்படுகின்றது என்பதற்கு சாட்சிகள் இருக்கவில்லை. | பதில் வழங்கப்பட வில்லை. | கல்வியல் கல்லூரிச் சபைகளைத் தோற்று விப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1999 இன் 44 ஆம் இலக்க யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதிய அதிகாரச் சட்டத்தின் | | | |
| | (i) 3(2) ஆம் பந்தி | முகாமைத்துவ சபையினால் யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியத்தின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டிய போதிலும் 20 ஆண்டுகளுக் காக 09 முகாமைத்துவ சபைக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாட்டில் காணப்பட்ட கொவிட் -19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக குழுக் கூட்டங்களுக்காக அங்கத்தவர்களைச் சேர்த்தக்கொள்ளும் சிக்கலின் காரணமாக முறைப்படியாக நடாத்தமுடியாதிருந்தது. | அதிகாரச் சட்டத்தின பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 9 ஆம் பந்தியின் (1), (2), (3) ஆம் பிரிவுகள் | நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக முறைப்படியாக கணக்குகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காசேடுகள் முறைப்படியாகப் பேணப்பட்டிருந்தும் துணை ஏடுகளும் பேரேட்டுக் கணக்குகளும் பேணப்படாதிருந்ததனால் பேரோட்டுக் கணக்குகளைத் தயாரித்து அதற்கிணங்க இறுதிக் கணக்குகளைத் தயாரித்து விரைவாக சமர்ப்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஈ)** | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | 19 தேசிய கல்விக் கல்லூரிகளில் 08 கல்விக் கல்லூரிகள் முன்னைய ஆண்டிற்காகவும் மீளாய்வாண்டிற்காகவும் எதுவித பொருள் மீளாய்வினையும் மேற்கொண்டிருக்காததுடன் மேற்கொண்ட மீளாய்வுகளின தும் அறிக்கை கணக்காய் விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டு முழுவதும் இலங்கையின் அனைத்து கல்வியல் கல்லூரிகளிலும் கொவிட் சிகிச்சை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததனால் நிர்ணயிக்கப்பட்ட வேளைக்கு பொருள் மீளாய்வு நடவடிக்கைகளைமேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | அனைத்து கல்வியல் கல்லூரிகளிலும் பொருள் மீளாய்வு நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கும் மீளாய்வு அறிக்கைகளை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.7 ஏனைய அவதானிப்புக்கள்

**..........................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ...................................................... | ...................................... | ................................ |
| (அ) | 2008 செப்தெம்பர் மாதம் 24 ஆந் திகதிய அமப/08/1742/316/086 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக் குழு உருவாக்கப்பட்டிருந்தும் அது சம்பந்தமான அல்லது அது தொடர்பான வரைபு அதிகாரச் சட்டம் 2008 ஒக்தோபர் மாதம் சட்ட வரைபுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் அதிகாரச் சட்ட நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படவில்லை. | சட்ட வரைபுத் திணைக்களத்தின் ஆலோசனையின் பேரில் பழைய அமைச்சரவைத் தீர்மானம் போதியதல்லாததனால் பெற்றுக்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட இறுதி வரைபு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டம் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆணைக்குழுவின் பதவியணியினர்களை நியமித்தல் மற்றும் கொடுப்பனவு செய்தல் அதிகாரச் சட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதிகாரச் சட்டம் அங்கீகரிக்கப்படாதிருந்தும் 2006 ஒக்தோபர் 04 ஆந் திகதிய அமைப/08/1742/316/087 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆணைக்குழுவிற்கு பதவியணியினர் நியமிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் பிரான்சின் பரிஸ் நகரில் அமைந்துள்ள யுனெஸ்கோ வின் நிரந்தர முகவர் அலுவலகத்திற்கு ஒரு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் இணைத்துக்கொள்ளப்பட்டு ஊதியமாக 2017 இலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை ரூபா 35,648,813 மொத்த தொகையான நிதி ஏற்பாடு கல்வி அமைச்சினால் வெளிநாட்டு விவகார அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | 2021-12-31 ஆந் திகதி சேவையின் பின்னர் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரின் சேவையை முடிவுறுத்துவதற்கு கல்வி அமைச்சு செயலாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அது பற்றி பரிசில் இருக்கும் தூதுவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க 2022 இலிருந்து உரிய பதவி இரத்துச் செய்யப்பட்டு கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்தினை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியத்திற்குரிய ரூபா 10.26 மில்லியன் தொகை 2015 ஆம் ஆண்டின் போது வங்கி நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு புலமைப்பரிசிலினை வழங்குதல் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் புலமைப்பரிசிலினை வழங்குதல் 2021 மே மாதத்திலிருந்து நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியம் தொடர்பான பணம் 1999 ஆம் ஆண்டிலிருந்து 2014-12-30 ஆந் திகதி வரை யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியத்திற்குரிய பொதுவைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு பல வேண்டுதல்களின் பின்னர் நிதியத்தின் நடவடிக்கைகளை பேணுவதற்காக அப்பணம் நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது 2015 சனவரி மாதத்திலாகும். எனவே அந்நிதியம் தொடர்பான நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டது என தெரிவிக்கிறேன். | முறையான வகையில் குறிப்பிட்ட புலமைப்பரிசில் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு மீளாய்வு

..............................................

### 3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

...................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ………………………….................. | …………………… | ………………….. |
| (அ) | 2021 ஆம் ஆண்டில் முடிவுறுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்கு மத்தியில் எதுவித செயல்முன்னேற்றத்தினையும் அடைந்து கொள்ளாத 7 பிரிவுகளுக்குரிய செயற்பாடுகள் 56 ஆக இருந்ததுடன் அவற்றின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 428,610,000 ஆகும். | கொவிட் -19 தொற்று நோய் நிலைமை காணப்பட்டமை, பொருட்களின் விலைகள் மாற்றமடைந்ததன் அடிப்படையில் பெறுகை நடவடிக்கைகளும் தாமதமடைந்தமை ZOOM தொழில்நுட்பத்தினூடாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தொழில்நுட்ப வசதிகள் இல்லாமை, அமைச்சினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் புதுப்பித்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டமை, கல்வியல் கல்லூரிகள் கொவிட் நிலையமாக பேணப்பட்டமை, நிதி ஏற்பாடு போதியவையாக இல்லாமை, நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாத மூலதன செயற்திட்டங்களை நிறுத்த வேண்டி ஏற்பட்டமை போன்ற காரணங்களின் அடிப்படையில் செயற்பாடுகள் நிறைவேற்றமுடியாதிருந்தது. | நடைமுறையில் அமுல்ப்படுத்தக்கூடியதாக திட்டங்களைத் தயாரிப்பதற்கும் திட்டத்திற்கு இணங்க செயற்படுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கொவிட் -19 தொற்று நோய் நிலைமையின் கீழ் 2021 ஆம் ஆண்டின் போது 229 நாட்கள் பாடசாலைகளை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் மேல் மாகாணத்தில் 102 நாட்களும் ஏனைய மாகாணங்களில் 143 நாட்களும் மாத்திரம் பாடசாலைகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் 2022-04-08 ஆந் திகதி வரை பாடசாலை ஆண்டு நீடிக்கப்பட்டிருந்தது. பிள்ளைகளின் கற்றலின் நட்டம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் | பதில் வழங்கப்படவில்லை. | கல்வி கற்கும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டதனை ஈடுசெய்வதற்காக நிகழச்சித் திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இழக்கப்பட்ட பாடசாலை நாட்களின் பாடங்களை ஈடுசெய்வதற்காக தொலைக் கல்வி நடைமுறைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தும் சமிக்ஞை சிக்கல் மற்றும் தேவையான தொழில்நுட்ப வசதிகள் இல்லாமை, மாணவர்களுக்கு இணைய வழியினூடாக தொடர்பு கொள்வதற்கு முடியாமை, பெற்றோர்களின் பலவீனமான பொருளாதார நிலைமையின் காரணமாக இணைய வழிக் கல்விக்கு தொடர்பு கொள்வதற்கு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளமை, பல ஆசிரியர்களுக்கு தொலைக்கல்வி தொடர்பாக குறைந்த அறிவு காணப்படுகின்றமை ஆகிய சிக்கல்கள் காணப்பட்டன. கொவிட் -19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது மாணவர்கள் கல்வி கற்கும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டதனை ஈடு செய்வதற்காக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது அமுல்ப்படுத்துவதற்கு தேசிய கல்வி நிறுவனத்தினால் 100 நாட்கள் துரித நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்து அமுல்ப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் அந்நிகழ்ச்சித் திட்டத்தை கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது.

**3.2 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| அமைச்சின் 15 கிளைகளுக்குரிய 30 செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் 3.52 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரையான வீச்சல் காணப்பட்டதுடன் தோட்ட பாடசாலைகளின் அபிவிருத்திப் பிரிவின் செயலாற்றலானது 3.52 சதவீதமான மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் அதன் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 17,937,640,000 ஆகும். | செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் திட்டமிட்ட காலத்திற்குள் கொவிட் -19 தொற்று நோய் நிலைமை காணப்பட்டமை, பொருட்களின் விலைகள் மாற்றமடைந்தமையின் அடிப்படையில் பெறுகை நடவடிக்கைகள் தாமதமடைந்தமை, போதியளவு கட்டுநிதி கிடைக்காமை ஆகிய | நடைமுறையில அமுல்ப்படுத்தக்கூடி யதாக திட்டங்களைத் தயாரித்து தயாரிக்கப்பட்ட திட்டங்களுக்கு இணங்க நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | காரணங்களின் அடிப்படையில் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | |

**3.3 செயற்திட்டங்களை பூர்த்திசெய்யாது கைவவிடுதல்**

**………………………………………………………………………………**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| **……………………….................** | **……………………** | **…………………..** |
| 2020 திசெம்பர் மாதத்தில் முடிவடைந்த “அருகாமையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை தேசிய நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து ரூபா 7,270,000 தொகை செலவு செய்திருந்த 03 மாகாணங்களின் 05 அதிபர் உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் 09 ஆசிரியர் இல்லங்கள் 2022 யூலை 05 ஆந் திகதி வரையும் வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருக்காததுடன் பௌதீக செயல்முன்னேற்றம் இல்லாதிருந்துபோதிலும் ரூபா 6,519,755 செலவு செய்யப்பட்டிருந்த அதிபர் உத்தியோகபூர்வ இல்லமும் காணப்பட்டன. இச்செயற்திட்டம் தொடர்பாக 07 மாகாணங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் முடிவுறுத்துவதற்கு முன்னர் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 2,330,567,473 தொகையான 117 செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்டங்களுக்காக 2022 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,850,981,812 செலுத்தப்பட்டு இன்னும் ரூபா 1,755,968,623 தொகை செலுத்த வேண்டி இருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | கைவிடப்பட்ட செயற்திட்டங்களை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

.........................................................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ………………………….................. | …………………… | ………………….. |
| (அ) | 2021 ஏப்ரல் 05 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மொறட்டுவை பல்கலைக் கழகத்தில் மருத்துவ பீடத்தினை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிர்மாணிக்கப்படுகின்ற தனியார் காணியைப் பெற்றுக்கொள்ள முடியாமை மருத்துவ பீடத்திற்குத் தேவையான கட்டிடத் தொகுதியை திட்டமிடுதல்/நிர்மாணித்தல் நடவடிக்கைகளுக்காக குவைட் நிதியத்துடன் உடன்படிக்கை செய்து கொள்வதற்கு முடியாதிருந்தது. மீளாய்வாண்டிற்கு ரூபா 200 மில்லியன் உள்நாட்டு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | மொறட்டுவை பல்கலைக் கழகத்தில் மருத்துவ பீடத்தை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 200 மில்லியன் நிதி ஏற்பாடு குவைட் அரசாங்கத்தின் அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியத்துடன் 2021 ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்யப்படாமையின் காரணமாக பயன்படுத்த முடியாதிருந்தது. எவ்வாறாயினும் மொறட்டுவை பல்கலைக் கழகத்தில் மருத்துவ பீடத்தினை ஆரம்பித்து 104 மாணவர்கள் 2019/2020 கல்வி ஆண்டிற்காக சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் உள்நாட்டு நிதி ஏற்பாட்டின் கீழ் முதலாம் ஆண்டு கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவை தீர்மானம் மற்றும் திட்டங்களின் பிரகாரம் மருத்துவ பீடத்தினை உருவாக்கும் குறிக்கோளினை அடைந்து கொள்வதற்காக தாமதமின்றி பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வயம்ப பல்கலைக்கழகத்தை சுற்றியுள்ள அதிக நீர் வளமுள்ள பிரதேசத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் பல்கலைக்கழகத்தை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டுவரும் பிரதான குறிக்கோளுடன் 2017 ஒக்தோபர் 24 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 திசெம்பர் அளவில் பூர்த்திசெய்வதற்கு ரூபா 4,077 மில்லியன் செயற்திட்ட பெறுமதிக்கு சவூதி அரேபியா அரசாங்கத்துடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்பட்டது. செயற்திட்ட காலம் அடிக்கடி நீடிக்கப்பட்டு | இச்செயற்திட்டத்தின் கொடுப்பனவுகள் நேரடி கொடுப்பனவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவு என்பதனால் சவூதி நிதியத்திற்கு ரூபா 509 மில்லியன் பெறுமதியான கொடுப்பனவு வவுச்சர்கள் உரிய பொருட்களை வழங்கியதன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் சவூதி நிதியத்தின் மூலம் ஒப்பந்தக்காரர்கள்/வழங்குனர்களின் வங்கி கணக்கிற்கு உரிய பணத்தை | மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அங்கீகரித்த மதிப்பீட்டு கிரய எல்லைக்குள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியதுடன் தற்பொழுது இடம்பெற்றுள்ள தாமதத்திற்கு இணங்க இலக்கிடப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | இறுதியாக 2023 சனவரி 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி அளவில் அடைந்து கொள்ளப்பட்ட பௌதீக செயல்முன்னேற்றம் 29 சதவீதம் மாத்திரமாகும். | முறைப்படியாக நேரடியாக ஆண்டிற்குள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் அக்கொடுப்பனவுக்குரிய வரவுச் சிட்டை (Debit Advice) 2021-12-31 ஆந் திகதி வரையும் (அந்த நிதியத்தின் மூலம்) திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படாததனால் 2021 ஆம் ஆண்டு தொடர்பாக கணக்கு வைத்தலில் தாமதம் ஏற்பட்டுள்ளது. ரூபா 509 மில்லியனுக்கு மேலதிகமாக நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படவில்லை என்பதனை நிரூபிப்பதற்கான காரணம் செயற்திட்டத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட வவுச்சர்களுக்காக அன்பளிப்பாளர்களால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும் அச்செலவுகளை கணக்கீடு செய்வதற்காக ஆண்டின் போது அறிக்கையிடப்படாமையாகும். நிகழ்கால பௌதீக செயல்முன்னேற்றத்தினை 29 சதவீதம் என அறிவிக்கிறேன். | திகதியில் செயற்திட்டத்தை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடு |
| (இ) | கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்திற்காக நிர்மாணிக்கப்படுகின்ற 17 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 4,707.5 மில்லியன் பெறுமதியான ஒரு ஒப்பந்தத்தை கம்பனிக்கு வழங்கி இந்த ஒப்பந்தத்தை 2020 திசெம்பர் மாதமளவில் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 2022 சனவரி 15 ஆந் திகதி வரை மேலும் காலம் நீடிக்கப்பட்டிருந்தும் அறிக்கைத் திகதி வரை செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 திசெம்பர் மாதமளவில் இச்செயற்திட்டத்தினைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் அதனை 2022 ஆம் ஆண்டு வரை நீடிக்க வேண்டியிருந்தது என்ற கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கிறேன். செயற்திட்ட நடவடிக்கைகளின் சில விடயங்களின் காரணமாக தாமதமடைந்துள்ளதுடன் 2022-03-31 அளவில் செயற்திட்டத்தின் 99.5 சதவீதமான நிர்மாண நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதுடன் கட்டிடத்தின் 06 ஆவது மாடி பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் | அனைத்து மாடிகளினதும் மிகுதி வேலைகளை துரிதமாக முடிவுறுத்தி உரிய குறிக்கோளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 09 ஆம் மாடி ஒப்பந்தக்காரரால் ஆலோசனை நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. கீழே உள்ள இரண்டு மாடிகளையும் பூர்த்தி செய்யும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | |
| (ஈ) | ருகுணு பல்கலைக்கழகத்தில் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,180 மில்லியன் தொகையான 12 மாடிகளைக் கொண்ட மருத்துவ பீட கட்டிடத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் ஒப்பந்தக்காரரின் தாமதத்தினால் 2019 திசெம்பர் 23 ஆந் திகதி ஒப்பந்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 155.3 மில்லியன் முற்பணத்தை அறவீடு செய்வதற்கு எடுக்கப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதிவரையும் முடிவடைந்திருக்கவில்லை. | ருகுணு பல்கலைகழகம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் படி 2020-06-10 ஆந் திகதி வணிக நீதிமன்றத்தின் முன்னிலையில் எதிர்ப்பினை கோவை செய்துள்ளதுடன் அந்த முறைப்பாட்டிற்காக வாதியான ருகுணு பல்கலைக்கழகம் பதிலளித்துள்ளது. அது சம்பந்தமாக இன்று வரை பிரதிவாதியான இலங்கை வங்கி இது சம்பந்தமாக பதிலளித்திருக்காததுடன் 2021-11-12 ஆந் திகதி வணிக உச்ச நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் எழுத்துமூல சாட்சிகளை கோவை செய்வதற்கு 2022-01-28 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க உரிய பிணைப் பணத்தை பெற்றுக்கொள்வதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துவருகின்றது. | எதிர்காலத்தில் ஒப்பந்தங்களை வழங்கும் போது உரிய ஒப்பந்தக்காரரை தவறிழைத்த ஒப்பந்தக்காரராக கருதி கேள்வி மனுவை வழங்காதிருப்பதற்கும் முற்பணத்தை அறவீடு செய்வதற்கும் துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 36 மாதங்களில் வேலையை முடிவுறுத்தும் அடிப்படையில் ரூபா 1,138.4 மில்லியன் பெறுமதியான கராபிடிய வைத்தியசாலையில் பேராசிரியர் அலகினை உருவாக்கும் செயற்திட்டம் 2017 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தம் மீளாய்வாண்டின் இறுதிவரை செயற்திட்டத்தின் கட்டமைப்பு ரீதியான நிர்மாணங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | தற்பொழுது உரிய செயற்திட்டத்தின் 07 மாடிகளின் கட்டமைப்பு ரீதியான நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்கிறேன் சுகாதார அமைச்சுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்து எதிர்பார்த்த குறிக்கோள்களுக்காக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கைச்சாத்திடுவதில் தாமதம், நிர்மாணங்கள் இடம்பெறும் காணியில் காணப்பட்ட மருத்துவர் உத்தியோகபூர்வ இல்லத்தை அகற்றுவதில் தாமதம் இடம்பெற்றுள்ளமை, கொவிட் 19 தொற்று நோய் என்பவற்றின் காரணமாக தாமதமடைந்துள்ளது. | |

**3.5 வெளிநாட்டு கடன் மற்றும் உதவி செயற்திட்டம்**

**..........................................................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ……………………….................. | …………………… | ………………….. |
| (அ) **இரண்டாம் நிலைக் கல்விக்காக தகவல் தொழில்நுட்ப நிலையத்தினை நிர்மாணித்தல்** | | |
| (i) இதற்காக ஹேமாகம வடக்கு பிடிபனவில் தேசிய மட்டத்திலான விடயம் சார்ந்த இணையவழி/கணனி மென்பொருள் மற்றும் கணனி உள்ளீடுகளை உருவாக்கும் ஒரு நிலையத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் சாத்திய வள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் உத்தேசிக்கப்பட்டிருந்தும் பின்னர் 2018 யூன் மாதம் 13 ஆந் திகதிய அமைப/18/1142/835/005 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க குளியாப்பிட்டி நாரகஸ்கலவத்த காணி அதற்காக சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. மீண்டும் 2020 சனவரி 09 ஆந் திகதிய அமைப/19/3468/219/016 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஹேமாகம பிரதேச செயலகப் பிரிவில் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தற்பொழுது பயன்படுத்துகின்ற 08 ஏக்கர்கள் காட்டுக் காணியினை | பதில் வழங்கப்படவில்லை. | செயற்திட்டம் சம்பந்தமாக உறுதியான கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்து செயற்திட்டத்தின் பிரதிபலன்களை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளாதுபகுதியை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு செயற்திட்டத்தின் நிர்மாணங்களுக்குரிய உத்தேச காணியை அடிக்கடி மாற்றியமையால் செயற்திட்டம் தொடர்பான கடன் உடன்படிக்கை 2019 ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்டிருந்தும் செயற்திட்டத்தினை செயற்திறனாக அமுல்ப்படுத்தமுடியாததுடன் செயற்திட்ட கால எல்லையும் மிகைத்திருந்தது. | | |
| (ii) | அவ்வாறே தென் மாகாணத்திற்காக நில்வளா கல்வியல் கல்லூரி காணியிலும் கிழக்கு மாகாணத்திற்காக அட்டாளைச்சேனை கல்வியல் கல்லூரி காணியிலும் 2 மாகாண தகவல் தொழில்நுட்ப கல்வி நிலையங்களை நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம் கிடைத்திருந்தது. பின்னர் 2021-07-26 ஆந் திகதிய அமைப/21/1324/308/113 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தென் மாகாண தகவல் தொழில்நுட்ப நிலையத்தினை தென் மாகாண சபைக்குறிய பாடசாலைக் காணியில் நிர்மாணிப்பதற்கும் 2021.09-28 ஆந் திகதிய அமப/21/1655/308/113-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கிழக்கு மாகாண தகவல் நிதியத்திற்காக திருகோணமலை துறைமுக வீதியில் 528 ஆம் இலக்க தொடக்க நில அளவைப் படத்தின் 1 ஆம் இலக்க காணித்துண்டை ஈடுபடுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் கடன் உடன்படிக்கை | பதில் வழங்கப்படவில்லை. | செயற்திட்டம் சம்பந்தமாக உறுதியான கொள்கை ரீதியான தீர்மானத்தினை எடுத்து செயற்திட்டத்தின் பிரதிபலன்களை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கைச்சாத்திடப்பட்டிருந்தும் அடிக்கடி நிலையத்தை நிர்மாணிக்கும் இடத்தை மாற்றியதன் காரணமாக செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது. SRI/31-2573 ஆம் இலக்க 2021 நவம்பர் 09 ஆந் திகதிய கொரிய EXIM வங்கியின் கடிதத்தின் மூலம் இச்செயற்திட்டத்தின் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட இடத்தை மீண்டும் மாற்றுவதில்லை என்ற சான்றிதழ் வேண்டப்பட்டிருந்தது. அச்சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாததுடன் 2019-2021 செயற்திட்ட கால எல்லையினுள் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கும் முடியாதிருந்தது. | | |
| (ஆ) | இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் தோட்ட பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான செல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 129 மில்லியன் மூலதன நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் 2021-12-31 ஆந் திகதி வரையம் அதிலிருந்து எதுவித செயல்முன்னேற்றமும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பொலன்னறுவை மாவட்டத்தில் பல் இன மற்றும் மும்மொழி கல்வியுடன் ஒரு புதிய தேசிய பாடசாலையினை நிர்மாணிப்பதற்காக 2017-10-25 ஆந் திகதி ரூபா 297,843,626 பெறுமதியான ஒப்பந்தத்திற்கு ஒரு தனியார் கம்பனியுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 59,568,725 தொகையான தொடக்க முற்பணமும் அது தொடர்பான ரூபா 8,935,309 தொகையான பெறுமதி சேர் வரியும் அந்த ஆண்டின் போது கல்வி அமைச்சின் செலவுத் தலைப்பிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகளின் தாமதத்தின் காரணமாக 2020-01-22 அந் திகதி அந்த உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் | பதில் வழங்கப்படவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதமின்றி உடன்படிக்கையின் பிரகாரம் முடிவுறுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அத்திகதியில் அறவீடு செய்ய வேண்டி இருந்த தொடக்க முற்பணம் ரூபா 40,850,633 தொகை மற்றும் பெறுமதி சேர் வரி ரூபா 6,127,600 ஆக இருந்தது. அவ்வாறே பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகம் தாமதம் தொடர்பாக வேண்டிக் கொண்ட ஆலோசனைக் கட்டணம் ரூபா 5,027,451 ஆகும். மீளாய்வாண்டின் இறுதிவரை இதன் செயல் முன்னேற்றம் 42.3 சதவீதமாக இருந்ததுடன் செயற்திட்டம் முடிவடையும் வரை தாமத காலத்திற்கான ஆலோசனைக் கட்டணத்தை அமைச்சு செலுத்த வேண்டி ஏற்பட்டது. | | |
| (ஈ) | கல்விப் பொதுத்தராதர (சா.த) மற்றும் கல்விப் பொதுத் தரதர (உயர்தர) வகுப்புக்களில் தொழில்நுட்ப பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களின் பற்றாக்குறையை குறைத்தல், தொழில்நுட்ப பாடத்தை கற்கும் மாணவர்களுக்கு ஆசிரிய தொழில்நுட்பவியலாளர்களாக உயர் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பினை வழங்குதல், தொழில்நுட்ப பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தமது தொழில் சார்ந்த அபிவிருத்திக்காக தொழில்நுட்ப பாடம் தொடர்பாக ஆசிரியர் பயிற்சியினை வழங்குதல் ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தொழில்நுட்ப பாடத்திற்காக தேசிய கல்வி கல்வியல் கல்லூரியை நிர்மாணிப்பதற்காக 2017 சனவரி 18 ஆந் திகதிய அமைப/16/2647/742/036-1 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்திற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017 இன் 93 ஆம் இலக்க கட்டளையின் மூலம் உரிய நிர்மாணத்திற்காக குளியாப்பிட்டி மேற்கு பிரதேச செயலகப் பிரிவினைச் சேர்ந்த நாரங்கொல்ல பிரதேசத்தில் ஒரு காணியை பயன்படுத்தும் உரிமை கல்விச் செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. கொரிய அரசாங்கத்தின் உதவியின் அடிப்படையில் நிர்மாணிப்பதற்குத் | பதில் வழங்கப்படவில்லை. | நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

திட்டமிடப்பட்ட இச்செயற்திட்டத்திற்கு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அத்திவாரக் கல் வைத்தலினை உள்ளடக்கி அருகிலுள்ளசிறந்த பாடசாலை செயற்திட்டத்தின் மூலம் ரூபா 15.3 மில்லியன் பணம் செலவு செய்யப்பட்டிருந்தும் செயற்திட்டத்தின் வேலைகள் தற்பொழுது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இச்செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தாமதமடைந்ததன் காரணமாக சர்வதேச கொரிய ஒத்துழைப்பு முகவராண்மை (KOICA) செயற்திட்டத்தின் நிர்மாணங்களிலிருந்து விலகி அதன் பொறுப்பினை அமைச்சிற்கு ஒப்படைத்திருந்தும் கணக்காய்வுத் திகதியான 2022 மே 31 ஆந் திகதி வரை இதன் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சிற்கு முடியாதிருந்தது.

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

.................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| …………………………................ | …………………… | ………………….. |
| (அ) தெரிவுப் பரிசோதனைக்கு இணங்க நாட்டிலுள்ள 26 பாடசாலைகளின் 49 ஏக்கர் 02 ரூட் 33 பேச்சஸ்களும் 03 ஆசிரியர் கல்லூரிகளின் 07 எக்கர் 01 ரூட் 25 பேச்சர்ஸ்களும் மற்றும் ஒரு கல்வியல் கல்லூரியில் காணப்பட்ட 91 ஏக்கர் 24 பேச்சர்ஸ்களும் பேச்சர்ஸ்களும் கல்வி அமைச்சின் அங்கீகாரமின்றி வெளித்தரப்பினர்களால் அதிகாரமின்றிபயன்படுத்தப்பட்டு வந்திருந்தும் அது சம்பந்தமாக அமைச்சின் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது. | அதிகாரமற்ற குடியிருப்பாளர்களை அப்புறப்படுத்துவது சம்பந்தமாக 1979 இன் 07 ஆம் இலக்க அரசாங்க காணிகள் (உடைமை உரிமையை மீளப் பெறல்) அதிகாரச் சட்டத்தில் 18 ஆம் பிரிவிற்கு இணங்க எந்தவொரு அரசாங்க காணி சம்பந்தமாகவும் தகுதி வாய்ந்த அதிகாரியானவர் ஒரு மாவட்டத்தின் அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், அல்லது உதவி அரசாங்க அதிபராக இருப்பதுடன் கல்வி அமைச்சின் கீழ் காணப்படுகின்ற அனைத்து பாடசாலைகளினது | சொத்துக்கள் முகாமைத்துவத் தினை சிறப்பாக மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பிரச்சினைகள் சம்பந்தமாக தனித்தனியாக ஈடுபடுவதற்கு நடைமுறையில் காணப்படுகின்ற சிக்கல்களினால் அதிபர்களும் பீடத் தலைவர்களும் பிரச்சினைகளை முன்வைக்கின்ற சந்தர்ப்பத்தில் உரிய பிரதேச செயலாளர்கள் சம்பந்தப்பட்டு பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிபர்களுக்கும் பீடாதிபதிகளுக்கும் தெரிவிக்கின்றார்கள். தேவையான சந்தர்ப்பங்களில் வெளிக்கள பரிசோதனைகளை மேற்கொண்டு பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும். | |
| (ஆ) | 13 தேசிய பாடசாலைகளில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய நிலையில் காணப்பட்ட 13 உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்தப்படாதும் , 21 தேசிய பாடசாலைகளின் உத்தியோகபூர்வ இல்லங்கள் திருத்தம் செய்யப்படாததன் காரணமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாமலும் 06 தேசிய பாடசாலைகளின் உத்தியோகபூர்வ இல்லங்களை திருத்தம் செய்தேனும் பயன்படுத்த முடியாதவையாக உடைந்த நிலையிலும் காணப்பட்டன. அவ்வாறே, இவ்வாறான இல்லங்களை உத்தியோகபூர்வ இல்லங்களாக பயன்படுத்தாது பாடசாலைகளின் பல்வேறு செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட 10 சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. | பதில் வழங்கப்படவில்லை. | உத்தியோகபூர்வ இல்லங்களை முகாமைத்துவம் செய்தலினை சிறப்பாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 10 தேசிய கல்விக் கல்லூரிகளின் தகவல்களின் பிரகாரம் கல்விக் கல்லூரிகளுக்குரிய 17 உத்தியோகபூர்வ இல்லங்களில் ஏனைய அரசாங்க நிறுவனங்களில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் குடியிருப்பதுடன் 2 கல்விக் கல்லூரிகளின் காணிகள் அத்துமீறிக் கைப்பற்றப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | அத்துமீறிய குடியிருப்பாளர்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2013/2014 ஆம் ஆண்டுகளில் கல்வி அமைச்சின் பெறுகை நடவடிக்கைகள் மற்றும் பத்தலகெதர கல்வி உபகர களஞ்சியத்தின் ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக விசேட புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் மூலம் இனங்காணப்பட்ட ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக நி.பி 104 இன் பிரகாரம் விசாரணைகளை நடாத்துமாறு 2021 இல் கல்வி அமைச்சு செயலாளருக்க தெரியப்படுத்தியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரை நி.பி 104 இற்கு இணங்க விசாரணை சபையை நியமித்ததனைத் தவிர்த்து எந்த ஒரு அறிக்கையும் வழங்கப்படவில்லை. | நி.பி 104(4) இன் பிரகாரம் விசாரணைகளை மேற்கொள்வதற்காக அமைச்சு உத்தியோகத்தர்களைக் கொண்ட விசாரணை சபை நியமிக்கப்பட்டுள்ளதுடன் விசாரணை அறிக்கைகளை வழங்குமாறு விசாரணை சபையின் தலைவருக்கு தெரியப்படுத்தப்பட்டது. | நிதிப்பிரமாணம் மற்றும் அமைச்சு செயலாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) நகர அபிவிருத்தி அதிகாரச் சபைக்குச் சொந்தமான 1.9320 ஹெக்டயர் அளவான காணியில் ரூபா 1,098.24 மில்லியன் செலவு செய்து கல்வி அமைச்சினால் பாதுகாப்புச் சேவை கல்லூரி நிர்மாணிக்கப்பட்டிருந்தும் காணியின் சட்டரீதியான உரிமையை அமைச்சினால் பொறுப்பேற்பதற்கும் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாதுகாப்புச் சேவைக் கல்லூரி அமைந்துள்ள காணியை கல்வி அமைச்சினால் பொறுப்பேற்பதற்காக அக்காணி தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட செலவுப் பெறுமதியை அந்த அதிகார சபைக்குச் செலுத்துமாறு தெரியப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க உரிய செலவுப் பெறுமதி தொடர்பான விபரமான தகவல்களை அந்த அதிகார சபையிடமிருந்து வேண்டிக்கொள்ளப்பட்டதுடன் நிதிப் பிரிவினால் அத்தகவல்களைப் பெற்றுக்கொண்ட உடன் | சட்டரீதியான உரிமையை அமைச்சினால் பொறுப்பேற்பதற்கும் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கல்வி அமைச்சிற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | அமைச்சின் ஊடக பணிப்பாளருக்கு முழுமையாக பிரச்சார செயற்பாடுகளுக்காக மாதிரிகளைப் பரீட்சிப்பதற்கு வழங்கிய 20 டெப் கணனிகளில் ரூபா 364,000 பெறுமதியான 07 கணனிகளை அமைச்சினால் மீளப்பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | 07 கணனிகளுக்காக ஊடக அமைச்சர் அபான்ஸ் நிறுவனத்துடன் உருவாக்கிக் கொண்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் அபான்ஸ் நிறுவனத்தினால் 07 டெப் கணனிகளை அல்லது உரிய பணத்தை அமைச்சிற்கு செலுத்துவதற்கு இணங்கிக் கொள்ளப்பட்டது. | சொத்துக்களை அமைச்சினால் பெற்றுக்கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கையின் அனைத்து ஆசிரிய பதவியணியினரையும் பட்டதாரிகளாக மாற்றுவதற்காக தேசிய கல்விக் கல்லூரிகளை தரமுயர்த்துவதற்கு கொள்கை ரீதியான அங்கீகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதிய அமைப/19/3353/219/006 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இதற்காக நிபுணர்கள் குழுவினை நியமித்து உரிய திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல் கட்டத்தில் அறிக்கைத் திகதி வரை காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | அமைச்சரவைத் தீர்மானத்தை அமுல்ப்படுத்த வேண்டும். |
| (ஈ) | ஆசிரிய பயிலுனர்களை பயிற்றுவிப்பதற்காக 19 கல்விக் கல்லூரிகளை தோற்றுவித்து வருடாந்தம் ரூபா 2,200 மில்லியனுக்கு அதிக பணம் திரண்ட நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டிருந்தது. கல்விக் கல்லூரிக்காக வருடாந்தம் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது க.பொ.த உயர்தர பரீட்சை நடாத்தி 3 ஆண்டுகள் கடந்திருந்த 2018 இல் நடைபெற்ற பரீட்சைகளிலிருந்து ஆசிரிய பயிலுனர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் 2021 ஆம் ஆண்டிலும் முடிவடைந்திருக்காததுடன் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் பரீட்சைகளிலிருந்து ஆசிரிய பயிலுனர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் 2022 மே 22 ஆந் திகதி வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | ஆசிரிய பயிலுனர்களைச் சேர்த்துக்கொள் வதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

.........................................................................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ………………………….................. | ……………………… | ………………….. |
| ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (2015- 2030) பிரகாரம் குறிக்கோள் 04 இன் இலக்கு 1 இன் பிரகாரம் விளைதிறனாக செயற்பட்டுப் பெறுபேறுகளைப் பொற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில் தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவகளுக்கு வழங்கப்படுகின்ற கல்வியில் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் 4 இன் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக தனியார் பாடசாலைகளை பதிவு செய்யும் போது, செயற்படுத்தும் போது, மற்றும் மேற்பார்வை செய்யும் போது ஒரு பாடசாலையில் இருக்க வேண்டிய தரமான மற்றும் போதியளவான திட்ட விபரம் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | ஆரிசியர்கள், பாடசாலைகள் மற்றும் வலய/மாகாண உத்தியோகத்தர்களின் நிறுவன நடவடிக்கைகள் தொடர்பான அறிவினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக சுற்றறிக்கை அறிவுறுத்தல் தொகுப்பு மற்றும் தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடுதலும், அமுல்ப்படுத்தலும், சுய ஒழுங்குபடுத்தல் நடைமுறையை பரீட்சித்துப்பார்ப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் செயன்முறையில் காணப்படுகின்ற சிக்கல்களை இனங்காண்பதற்கும் அபிவிருத்திசெய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டில் ஒழுங்குபடுத்தல் நிகழ்ச்சித்திட்டமாக அமுல்ப்படுத்துதல், நியமம் மற்றும் முகாமைத்துவ கிளையின் விடயப்பரப்பிற்கு அரசாங்கத்தின் அங்கீகரித்த தனியார் பாடசாலைகளையும் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல், சர்வதேச பாடசாலைகளை உள்ளடக்கி ஏனைய தனியார் பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவதற்கு கல்வி அமைச்சு சட்ட ரீதியான அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பதற்குத் திட்டமிட்டுள்ளது. | ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (2015-2030) குறிக்கோள் 04 இன் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முறையான நடைமுறையைத் தயாரித்து அவற்றினை காலத்திற்கு பொருத்தமாக மதிப்பீடு செய்தல் வேண்டும். |

## 5. நல்லாட்சி

..........................

### 5.1 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்

..........................................................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ………………………….................. | ……………………… | ………………….. |
| 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க மற்றும் 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2008 (i) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் பிரசைகள்- சேவை நாடுனர் நியதிச்சட்டம் ஸ்தாபிக்கப்பட்டு செயற்படுத்துதல் மீளாய்வாண்டின் இறுதிவரையும் இடம்பெற்றிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் பிரசைகள்-சேவைநாடுனர் நியதிச் சட்டம் ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். |

## 6. மனித வளங்கள் முகாமைத்துவம்

............................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ………………………….................. | ……………………… | ………………….. |
| (அ) சிரேஷ்ட மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் 2,234 ஆகக் காணப்பட்டதன் காரணமாக முகாமைத்துவ தீர்மானங்களை எடுக்கும் போதும் ஏனைய வெற்றிடங்களின் காரணமாக அமைச்சு நடவடிக்கைகளின் போதும் இடையூறுகள் உருவாகியிருந்தன என்பது அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | தேவையான பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படுதல் வேண்டும். |
| (ஆ) தேசிய கல்விக் கல்லூரிகளில் மூன்று மொழிகளிலும் நடாத்தப்படுகின்ற 45 பாடங்களின் அங்கீகரித்த விரிவுரையாளர் பதவிகள் 1,166 இல் 498 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. சிங்கள மொழி விரிவுரையாளர் வெற்றிடங்கள் 40 சதவீதமாகவும், தமிழ்மொழி வெற்றிடங்கள் 48 சதவீதமாகவும் ஆங்கில மொழி வெற்றிடங்கள் 42 சதவீதமாகவும் காணப்பட்டமை கல்வியல் கல்லூரி முறைமையின் செயலாற்றல் தொடர்பாக நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். | பதில் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கல்விக் கல்லூரியின் பதவியணிக்காக ஒரு இடமாற்ற நடைமுறை இல்லாததுடன் 10 கல்விக் கல்லூரிகளின் 119 கல்விசார் பதவியணியினர்களும் 140 கல்வி சாரா பதவியணியினர்களும் 8 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இடமாற்றம் பெற்றுக்கொள்ளாது ஒரே சேவை நிலையத்திலேயே சேவையாற்றுகின்றனர். | பதில் வழங்கப்படவில்லை. | இடமாற்ற நடைமுறையினை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |